


பாமாலை 562 என் தேவனே என் ஆத்துமா

1 என் தேவனே என் ஆத்துமா
நீர் தந்த நன்மையைச்
சிந்தித்துப் பார்க்கையில் மகா
வியப்பாய்த் தோன்றுதே.

2 உற்பத்திக்காலம் முதலாய்
என்னை நடத்தினீர்;
என் ஆவி தேகம் தயவாய்
இம்மட்டும் தாங்கினீர்.

3 சீர் கேடு நீங்க நெஞ்சத்தைச்
செம்மைப் படுத்தினீர்;
அநேக மாறுதல்களை
எனக்கருளினீர்.

4 என் ஜீவ காலம் எல்லாம் நீர்
அன்பாய் விசாரித்தீர்;
இம்மட்டும் என்னைத் தேவரீர்
பராமரிக்கிறீர்.

5 கர்த்தாவே உம்மைப் போற்றுவேன்
இடை விடாமலே;
எப்போதும் உம்மைப் பற்றுவேன்
உற்சாகமாகவே.